Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 429/2024 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஹரிபிரசாத் |
| Father's Name | – | கிருஷ்ணசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1, 2 present. Accused 3 absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சூளேஸ்வரன்பட்டியில் குடியிருந்து கொண்டு Food Delivery வேலை செய்து வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ம் தேதி மகாலிங்கபுரம் சங்கரா ஸ்வீட்ஸ் கடையில் மடிக்கணினியை வாங்கி மோனிகா என்பவரிடம் கொடுக்க சென்றிருந்தேன். நான் ஸ்வீட்ஸ் கடையில் கூட்டாளியாக இருநதேன். அப்பொழுதே எங்களுக்குள் பிரச்சனை இருந்தது.

நான் மடிக்கணினியை வாங்கபோகும்போது நீ எதற்கு இங்கு வருகிறாய் என்று கூறி இடது கண்ணில் அடித்துவிட்டார்கள். நான் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான் இது குறித்து எனது அம்மாவிற்கு அலைபேசியில் தகவல் கூறினேன். எனது அம்மாவும், பாட்டியும் கேட்பதற்காக சங்கரா ஸ்வீட்ஸ் கடைக்கு சென்றார்கள். எனது அக்கா பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்ததால் மூவரும் சென்று கேட்டார்கள்.

அப்போது எனது அம்மாவை பிடித்து அடித்துவிட்டார்கள். பின்னர் எனது அம்மா காவல்நிலையத்திற்கு சென்று தகவல் கூறிவிட்டு பின்னர் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். எனது அம்மாவிற்கு இடது தலையில் 12 தையல் போடப்பட்டுள்ளது. வலதுபுற கண்ணிற்கு கீழே காயம் இருந்தது. பின்னர் 3 மணியளவில் போலிசார் மருத்துவமனை வந்து தகவல் பெற்றார்கள். பின்னர் இரவு நானும் எனது அக்காவும் காவல்நிலையம் சென்றோம். எனது தாயாரின் அளித்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் சம்பந்தமாக நான் இரவு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா, பாட்டி, அக்கா மூவரும் எதிரிகளின் கடைக்கு சென்று தட்டிக்கேட்டதால்தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் மோனிகா என்பவரிடமிருந்து மடிக்கணினியை எடுக்க சென்றேன் என்றால் சரிதான். அப்போதுதான் ஆஜர் எதிரிக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான், மோனிகா அப்போது ஊரில் இல்லை, மடிக்கணினியை எடுப்பதற்காக சென்றேன்.

கொரியர் தொழில் செய்வதற்கு GST உரிமம் 1ம் எதிரியின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல, எனது பெயரில்தான் உள்ளது. சம்பவம் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆஜர் எதிரிகளும் நானும் தனித்தனியாக தொழில் செய்து கொள்ளலாம் மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு எழுதி

முடிக்கப்பட்டது என்றால் சரிதான். நிஷா தொழில் சம்பந்தமாக அவரிடம் மோசடி செய்ததாக புகார் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல, எனது பணம்தான் அவர்களிடம் உள்ளது.

நான்தான் ஏமாற்றி மோசடி செய்துவிட்டேன் என்றாலும், அதனால்தான் எனது அம்மா, பாட்டி, அக்கா ஆகியோர்கள் எதிரிகளின் கடைக்கு சென்று ரகளை செய்தார்கள் என்றாலும் சரியல்ல, கேட்கதான் சென்றார்கள். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.